# பத்திரிக்கைச் செய்தி

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 8.03.2018 வியாழக்கிழமை அன்று காலை 9.45 மணி முதல் மதியம் 1.00 மணி வரை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் முகாம் நடைபெறுகிறது. எனவே காஞ்சிபுரம் மாவட்டத்தை சார்ந்த அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் மாற்றுத் திறனாளிகள் துறை மூலம் உதவிகள், பிறதுறைகள் மூலமாக உதவிகள், பசுமை வீடு, இலவச வீட்டு மனை பட்டா, மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை போன்ற பல்வேறு கோரிக்கை மனுக்களுடன், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையுடன் கூடிய மருத்துவ சான்றிதழ், ஆதார் அட்டை, ரேசன் கார்டு நகல், பாஸ்போட்சைஸ் புகைப்படம் ஆகியவற்றுடன் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட உள்ளது. எனவே காஞ்சிபுரம் மாவட்டத்தை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் தங்களது கோரிக்கை மனுக்களுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.